


# ரகசிய சபதம்

இளம் வாசகர்களுக்கான இயற்கைக் கதைகள்


ஆக்கம்: வித்யா

ராஜாராம் சர்மா

மொழிபெயர்ப்பு: சுரேந்தர் பூபாலன்

செம்மையாக்கம்: த. பரசுராமன்

உதவி: க.ச. அமுதா

சு. மகேஸ்வரி

# பிற கதைகள்


மாறுபட்ட இறகுகளுடைய பறவைகள்

முட்டைகளின் மர்மம்

பெரியதும் சிறியதும்

உரிமையானவர்களும் தகுதியானவர்களும்

ஏரியில் இரண்டு பறவைகள் அரைமணி நேரத்திற்கும் மேலாக, வேலை செய்து கொண்டிருந்தன. அவை அழுகிய களைச்செடிகளை ஓரிடத்தில் குவித்தன. இந்தச் சிறிய பறவைகள் தண்ணீருக்குள் மூழ்குவதில் திறமை கொண்டவை. அவை மூழ்கிய பின் எந்த இடத்தில் வெளியே வரும் என, என்னால் கணிக்க முடியவில்லை. அவை ஒவ்வொரு முறை வெளியே வரும்போதும் வியப்பூட்டும் வகையில், அழுகிய களைச்செடியுடன் அல்லது இலையுடன்தான் வெளியே வந்தது. கொண்டுவந்ததை உடனே எடுத்துச் சென்று குவியலில் அடுக்கி வைத்தது.





அதில் ஒரு பறவை, அடிக்கடி குவியலின் மேல் ஏறி நின்றது. அப்போது, அந்த முழு அடுக்கும் லேசாக ஆடியது. அந்தக் குவியல் எதன் மேலாவது இருக்கிறதா? அல்லது மிதக்கிறதா?

“நீங்கள் என்ன கட்டுகிறீர்கள்? ஓய்வெடுக்க ஒரு தீவா?” என்னுடைய ஆர்வத்தை அடக்க முடியாமல், அந்தப் பறவைகளிடம் கேட்டேன்.

“நீ இங்கு என்ன செய்கிறாய்?” என கறுப்பும் வெள்ளையும் கலந்த வேறொரு பழுப்பு நிறப் பறவை கேட்டது.


“நீ யார்?” என நான் ஆச்சரியத்தோடு கேட்டேன்.

“நான் கொண்டஞ்சிறாவடி, இப்பகுதியில்தான் வாழ்கிறேன். நாங்கள் எங்கள் வேலையை மட்டுமே பார்த்துக்கொண்டு இருப்போம்” என்றது.

ஒருவேளை, நான் என்னுடைய வேலையைப் பார்த்துக்கொண்டு போக வேண்டும் என்பதைத்தான் அப்பறவை சொன்னதோ? அந்த நீர்ப்பறவைகள் என்ன செய்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளாமல், அந்த இடத்தைவிட்டு நான் எப்படிப் போவது?

நான் அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தபோது, கொண்டஞ்சிறாவடி அந்த இடத்தைவிட்டுப் பறந்து சென்றது. நான் என்ன நடக்கிறது என்று பார்க்க முடிவு செய்தேன். ஏரிக்கரையில் இருந்த சரக்கொன்றை மரத்தின் பக்கத்தில் அமைதியாக உட்கார்ந்தேன்.

சரக்கொன்றை மரம் பூத்துக் குலுங்கியது. நான் மரம் முழுவதும் கொத்து கொத்தாகத் தொங்கும் அரும்புகளைப் பார்க்கத் தலையை உயர்த்தினேன். அப்போது, ஒரு சின்னஞ்சிறு பறவை





அலகில் எதையோ வைத்திருப்பதைக் கவனித்தேன்.

“அப்பறவை கூடுதான் கட்டிக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், எங்கே?” பறவையைப் பின்தொடர முடியாமல் சத்தமாகச் சொன்னேன். அப்பறவை போய்விட்டது. ஆனால், கொண்டஞ்சிறாவடி விடாமல் என்னைப் பின்தொடர்ந்து வந்து கவனிப்பதை, நான் பார்த்தேன்.

“ஓ! இன்னும் என்னைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறாயா?”

“அதிலென்ன சந்தேகம், எங்களை வேவு பார்ப்பவர்களை நாங்கள் விரும்புவதில்லை” என்றது கொண்டஞ்சிறாவடி.

“அதோ! அந்தச் சிறிய பறவை... அது யார் எனத் தெரியுமா?”

“அது தையற்சிட்டு. அதோ அந்தத் தண்ணீரில் இருப்பவை முக்குளிப்பான்கள்” என்று பதிலளித்தது அப்பறவை.

“தையற்சிட்டு எவ்வளவு அழகான பறவை! அது இலைகளை ஒன்றாகச் சேர்த்துத் தைத்து கூடுகளை உருவாக்கும். இந்தப்பறவையும் கூடுதான் கட்டிக் கொண்டிருக்க வேண்டும்! அதன் கூடு எங்கே?” பரபரப்புடன் கேட்டேன்.

“தையற்சிட்டுகளைப் பற்றி உனக்கு நிறையத் தெரிந்திருக்கிறது. அப்படியானால், அவற்றை எங்கே தேடுவது என்றும் நிச்சயம் தெரிந்திருக்குமே?”

நான் என்னுடைய புத்தகத்தில் தையற்சிட்டின் கூட்டினைப் பார்த்திருக்கிறேன். அது இரண்டு மூன்று இலைகளைச் சேர்த்துத் தைத்து தலைகீழான கூம்பு போன்று இருக்கும்.





அதுபோன்ற கூடு தோட்டத்தில் எங்கிருக்கிறது எனத் தேடினேன். தூங்குமூஞ்சி மரத்தைப் பார்த்தேன்: அதன் குருத்திலைகள் சிறியதாக இருந்தன. அதேபோல், ஏழிலைப்பாலை மரத்தின் இலையும் சிறியதாக இருந்தது. அதிலும் தையற்சிட்டு இருக்காது என முடிவுக்கு வந்தேன். புதர்ச்செடிகள், கொடிகள் முதலியவற்றிலும் தேட வேண்டுமோ? அவற்றில் சில, அகன்ற இலைகளோடு இருந்தன.

“ஏய்! திருவாளர் கொண்டஞ்சிறாவடி அவர்களே, எனக்கு உதவி செய்ய மாட்டாயா?” என கொண்டஞ்சிறாவடியை அழைத்தேன்.

“நான் ஒன்றும் திருவாளர் அல்ல. அங்கே பார்! பஞ்சிட்டான். எங்களைப் போலவே, அந்தப் பறவை இனத்திலும் ஆணும்

பெண்ணும் பார்ப்பதற்கு ஓரே மாதிரி இருக்கும்.

ஆனால், சிட்டுகள் இனத்தில் ஆணும் பெண்ணும் பார்ப்பதற்கு வித்தியாசமாக இருக்கும்.”

“சரி திருமதி கொண்டஞ்சிறாவடி, தையற்சிட்டைப் பற்றிச் சொல்லேன்.”

“அவையும் வித்தியாசமானவைதான். ஆண் தையற்சிட்டுக்கு இனப்பெருக்கம் செய்யும் காலங்களில் வால் நீளமாக இருக்கும்.”

“இல்லை...; நான் அதைப்பற்றிக் கேட்கவில்லை. கூடு எங்கே இருக்கிறது? என வற்புறுத்திக் கேட்டேன்.

ஆனால், நான் ஏதோ தவறு செய்தது போல கொண்டஞ்சிறாவடி





அமைதியாக நடந்து சென்றது.

நான் அதைக் கவனித்தபோது, ஒரு சிறு கறுப்பு நிறப் பறவை குப்பைத் தொட்டிக்குள் போவதைப் பார்த்துத் திகைத்தேன். அந்தப் பறவை அங்கே என்ன செய்கிறது? கண்டுபிடிக்க வேண்டும்.

“ஆ! முட்டைகள், கூடு!”

“சத்தம் போடாதே!” என எச்சரித்தது கொண்டஞ்சிறாவடி. “அது குண்டுக்கரிச்சானின் கூடு. தூர வா, அதன் கவனத்தை ஈர்க்காதே. குண்டுக்கரிச்சான்கள் வழக்கமாக மரப்பொந்துகளில்தான் கூடுகளை அமைக்கும். ஆனால்...”

அப்பறவை ஏன் இந்த இடத்தைத் தேர்வு செய்தது? அக்கூட்டைப் பார்த்ததும் நான் திகைத்துப் போனேன்.

எவ்வளவு குச்சிகளை குவித்து வைத்திருக்கிறது!

“பொறு… பொறு! என்ன, குவியலா! முக்குளிப்பான்களும் குவியலை உருவாக்குகின்றன. அப்படியானால், அவை கூடு கட்டுகின்றனவா?”

கொண்டஞ்சிறாவடி சிறிது நேரத்துக்குப்பின், “ஆமா” என்று பதிலளித்தது.

நான் ஏரியைப் பார்க்கத் திரும்பினேன். அது ஒன்றும் பெரியது இல்லை. எனவே, அதைக் குளம் என்று அழைப்பதே பொருத்தமானது. இப்பொழுது நான் கவனமாகப் பார்த்தேன். நான்கு குவியல்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. “நான்கு கூடுகள்!” எனது கண்டுபிடிப்பால் உற்சாகமானேன்.

“ஏய்! அந்தக் கூடு மிதக்கிறதா? அவை இன்னும்






முட்டையிடவில்லையா? அங்கே எதையும் காணோம். அவை தண்ணிரில் அழுகிவிடாதா? அவற்றைப் பாம்புகளோ வேட்டைப் பறவைகளோ தின்றுவிடாதா? தயவுசெய்து சொல்.”

கொண்டஞ்சிறாவடி பார்ப்பதற்கு அமைதி இல்லாதது போல் இருந்தது. அது என்னிடம் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்திருக்க வேண்டும். இறுதியாக என்னைத் தீர்க்கமாகப் பார்த்தது. “கூடு கட்டுவதும் குஞ்சுகளை வளர்ப்பதும் முக்கியமான பணி. முட்டைகளும் குஞ்சுகளும் கண்டுபிடிக்கப்பட்டால், தின்னப்பட்டுவிடும். எனவே, கூடுகளைக் கட்டுவதில் அதிக அக்கறையுடன் இருப்போம்” என்றது. முடிந்தவரை, எங்களின் கூடுகளை மிகவும் இரகசியமாக வைத்திருப்போம். பெரும்பாலும் வெற்றி அடைவோம்!

நான் சிந்தனையில் மூழ்கினேன். கொண்டஞ்சிறாவடி, கூடுகளைப் பற்றிச் சொல்லத் தயங்கியதன் காரணத்தைப் புரிந்துகொண்டேன். கூடுகள் யார் கண்ணிலும் படாமல் இருக்க வேண்டுமென, அப்பறவை விரும்பியது. நான் கூடுகளைத் தொந்தரவு செய்ய மாட்டேன் என்றும் தாய், தந்தைப் பறவைகளைப் பயமுறுத்த மாட்டேன் என்றும் உறுதி அளித்தேன். நான் பலமுறை வேண்டிக் கேட்டதால், முக்குளிப்பான்களின் கூடு பற்றிய ரகசியத்தை, கொண்டஞ்சிறாவடி என்னிடம் கூறியது.

முக்குளிப்பான்களின் கூடுகள் தண்ணீரில் மூழ்காது. ஏனென்றால், அவை மரத்தின் அடிக்கட்டை அல்லது மூழ்கிய தாவரத்தை ஆதாரமாகக் கொண்டு கட்டப்படும். கூடுகள் தயாரானதும், பறவைகள் மூன்று முதல் ஐந்து முட்டைகள்வரை





இட்டு, நிறைய அழுகிய களைச்செடிகளால் அவற்றை மூடிவிடும். முட்டையிட்ட உடனே அல்லது பறவைகள் அடைகாக்கத் திறந்தாலோதான் அக்கூடுகளைப் பார்க்க முடியும். இல்லையெனில், அக்கூடுகள் யார் கண்ணிலும் படாது.

அவை கூடுகளை விட்டுப் போகும்போது, முட்டைகளைக் கவனமாக மூடிவிடும்.

“நீ அந்த மரத்தின் பக்கத்திலேயே நீண்ட நேரமாக நின்றுகொண்டிருக்கிறாய். நான் பந்தயம் வைக்கிறேன், அந்த மரத்தில் ஒரு கூட்டையும் நீ பார்த்திருக்க மாட்டாய்” கொண்டஞ்சிறாவடி நட்புடன் கூறியது.


“நீ அந்தத் தேக்கு மரத்தைப் பற்றிச் சொல்கிறாயா?” அந்த மரத்தை நோக்கிச் சென்றவாறே கேட்டேன். அந்த மரத்தைக்

கவனமாகப் பார்த்தேன். அது ஓர் இளம் மரம்; அதிக உயரமில்லை. நான் எவ்வளவு தேடியும் கூட்டையும் கண்டுபிடிக்க முடியவில்லை. பறவைகளையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

“சரி! அதை விடு, எங்கே பார்க்க வேண்டும் என்றுகூட உனக்குத் தெரியவில்லை. போய், மடிந்திருக்கும் அந்த இலையைப் பார்” என்று ஆணையிட்டது கொண்டஞ்சிறாவடி.

“தையற்சிட்டின் கூடு!” ஆச்சரியத்தில் கூச்சலிட்டேன். “அவை மட்டுமே இலைகளைத் தைத்து கூடுகளை உருவாக்கும்” என்றேன்.

“தவறு. பாடுஞ்சிட்டுகளும் அதுபோன்ற கூடுகளை உருவாக்கும்.”





நான் அசையாமல் அவ்விடத்தில் நின்றபடியே, அந்தக் கூட்டை ஆச்சரியமாகப் பார்த்தேன். அது, நான் படங்களில் பார்த்தது போல் இல்லை. ஒரே ஒரு தேக்கு இலையை மட்டுமே அப்பறவை பயன்படுத்தி இருந்தது. இலையின் ஓரங்களிலும் அடிப்பகுதியிலும் போடப்பட்டிருந்த துளைகளை என்னால் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

அப்பறவை நார்கள், பஞ்சு, சிலந்தி வலை முதலியவற்றைப் பயன்படுத்தி இரண்டு முனைகளையும் இழுத்து ஒன்றிணைத்து உருளை வடிவத்தை உருவாக்கியிருந்தது. உருளைக்குள் மெல்லிய இழைகளையும் புற்களையும் நிரப்பியிருந்தது. அந்த அதிசயக் கூட்டுக்குள்ளே மூன்று அழகிய சின்னஞ்சிறு முட்டைகள் இருந்தன.

நான் திரும்பிப் பார்த்தபோது, கொண்டஞ்சிறாவடி என்னைப்

பார்த்துச் சிரித்தது. “சிறிய பறவைக்கு ஏற்ற சிறிய கூடு; பின்னால் வருவது நல்லது; பறவைகள் எந்நேரத்திலும் வரலாம். அதன் ரகசியக் கூட்டைப் பிறர் பார்ப்பதை அவை விரும்பாது” என்றது.

கொண்டஞ்சிறாவடி சொன்னதைப் பற்றி கவலைப்படாமல், கூட்டைத் தொடர்ந்து ஆராய்ந்தேன்.

“அங்கே பார்” கொண்டஞ்சிறாவடி என் கவனத்தைத் திருப்பியது. “உனக்குப் பஞ்சிட்டானை நினைவிருக்கிறதா? அந்த அழகான பச்சை நிறப் பறவை? என்னுடன் வா” என்று சொல்லி, ஏரியின் தெற்குப் பகுதிக்கு என்னை அழைத்துச் சென்றது.

குழிகள் தோண்டப்பட்டு இருந்தன. அவை ஒருவேளை





மரக்கன்றுகள் நடுவதற்காகச் சில ஆண்டுகளுக்கு முன் தோண்டப்பட்டதாக இருக்கலாம். ஆனால், தெளிவாகத் தெரியவில்லை.

குழிகளுள் ஒன்றைச் சுட்டிக்காட்டி, அப்பறவை நான் என்ன பார்த்தேன் என்று கேட்டது.

“ஒன்றுமில்லை, ஒரு குழியும் அதிலுள்ள பிளவில் ஒரு வளையும்.”

“அது ஒரு சுரங்கம்! இரண்டு மாதங்களுக்கு முன் பஞ்சிட்டான் உருவாக்கியது.”


“எதற்காக?” நம்பிக்கை இல்லாமல் கேட்டேன்.

“கூடுகட்டுவதற்காக!”

பிறகு, பஞ்சிட்டான் எப்படி சுரங்கம் உருவாக்கும் என்று கொண்டஞ்சிறாவடி விளக்கியது. மேலும், அது மூன்று அடிக்கு மேல் இருக்கும் என்றும் அதன் முடிவில் அவை முட்டைகளை இடும் என்றும் கூறியது.

“இந்தச் சிறு பறவையால் இவ்வளவு நீண்ட சுரங்கத்தைத் தோண்ட முடியும் என்று, நீ எப்போதாவது கற்பனை செய்ததுண்டா? மீன்கொத்திகளும் இதுபோன்ற சுரங்கக்கூடுகளை உருவாக்கும். ஆனால், இவ்விரு பறவைகளின் கூடுகட்டும் பருவமும் முடிந்துவிட்டது.”

என்ன ஆச்சரியம்! நான் நிறைய பறவைகளைப் பார்த்திருந்தாலும், அவை எங்கே கூடு கட்டும் என்பதைப் பற்றியோ, எப்படிக் கூடு கட்டும் என்பதைப் பற்றியோ ஒன்றும் தெரியாது.





நான் கொண்டஞ்சிறாவடியிடம், "உன்னுடைய கூட்டை, எப்பொழுது? எங்கே? எப்படிக் கட்டினாய் என்று சொல்?" எனத் திரும்பிப் பார்த்து ஆர்வத்துடன் கேட்டேன்.

கொண்டஞ்சிறாவடி என்னை அச்சுறுத்தும் வகையில் பார்த்தது. நான் வேறு எதையாவது எதிர்பார்த்திருக்க வேண்டுமோ!

## கதாபாத்திரங்களைச் சந்தியுங்கள்

*இக்கதை கடந்த 2010 ஆம் ஆண்டு, மே முதல் ஆகஸ்ட் வரை, தெற்கு தில்லியின் எல்லையிலுள்ள காட்டின் ஒரு பகுதியான சஞ்சய் வனத்தில் உற்றுநோக்கியதன் அடிப்படையில் உருவானது. முக்குளிப்பான்கள், தையற்சிட்டுகள் ஆகியன நீண்ட இனப்பெருக்க காலத்தை உடையவை.*

*இப்புத்தகத்திலுள்ள புகைப்படங்கள் பறவைகள், கூடுகளின் உண்மையான அளவைக் குறிக்காது.*



கொண்டஞ்சிறாவடி



முக்குளிப்பான்



தாய் தையற்சிட்டு



கூட்டிற்குத் தேவையான பஞ்சுடன் தந்தை தையற்சிட்டு



தாய் குண்டுக்கரிச்சான்



தந்தை குண்டுக்கரிச்சான்



சிறிய பஞ்சிட்டான்

ரகசிய சபதம் published by VIDYA ONLINE is licensed under

a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported License
(http://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/)
Permissions beyond the scope of this license may be
available at admin@vidyaonline.org

http://vidyaonline.net